

ராணி காமிக்ஸ்
புத்தாண்டு விருந்து!
பொங்கல் மலர்

ராணி காமிக்ஸ் — 86
(மாதம் இருமுறை இதழ்)

ஜனவரி 15-31
1988

புத்தாண்டுக்கு என்ன செய்யலாம் என்பதை 6 நண்பர்கள் ஆலோசித்தார்கள்.
ஒட்டல் இமயத்தில் நடக்கும் மாறு வேட நடன—விருந்தில் கலந்து—கொள்ளலாம்!
அது-நான்-சரி!
சங்கர், அழகான இளைஞன். பணக்காரன். பிரமச்சாரி. அவன் கூறினான்—
நான் ஒரு மாலுமி மாதிரி வேடம் போடப் போகி—றேன். மாமா மகேஷ் நீங்க என்ன—வேடம்?
ராணுவ ஜெனரல் வேடம்!
நான் கிருஸ்தவ சாமியார் வேடம் போடுவேன்!
நான் கன்னி—யாஸ்திரி! மாலா நீ?
எனக்கு மாறுவேட—விருந்து ரொம்பப்—பிடிக்கும். நான் ஒரு ஜிப்சி போல் வருவேன்!
நந்தினி! நீ என்ன வேஷம் போடப் போறே?
நந்தினி அழகிப் போட்டியில் பரிசு பெற்றவள். சங்கரின் காதலி. அவள்—
நான் ராணி மாதிரி வருவேன்!
சரி! நான் டிக்கெட்டுகளையும், மற்ற ஏற்பாடுகளையும் செய்கிறேன்!
சரி! 31-ந்-தேதி இரவு சந்திப்போம்!

1-ந் தேதி இரவு ஓட்டல்
மயத்தில்-
நந்தினிக்கு என்ன? கவலையாக இருக்கிறாளே!
சங்கர்கூட- -வழக்கமான உற்சாகத்தில் இல்லை! என்ன காரணம்?
இருவருக்கும் ஏதோ ஊடல். நான் தீர்த்து- -வைக்கிறேன்!
நண்பர்களே! விருந்து- -தயார்!
விருந்தில் சங்கரும், நந்தினியும் ஒரு வார்த்தை பேசவில்லை. அதனால் கலகலப்பு குறைந்தது
ஏதோ சீரியசான விஷயம் இருக்கு!
நான் விருந்து முடிந்ததும் இரு- -வருடனும் பேசு- -கிறேன்.
விருந்துக்குப் பின்-
அருண்! எனக்கு தலை வலியா இருக்கு! வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போங்க!
நந்தினி! சங்கர் ஏதாவது கோபமாக பேசினானா?
சங்கர் பற்றி என்னிடம் பேசாதே! நான் யார் என்று அவருக்குப் பாடம்- -புகட்டுகிறேன்!
கொஞ்சம் இரு! நான் அவனுடன் பேசுகிறேன்.
கொஞ்ச நேரம் கழித்து-
அவன் மூடு சரி இல்லை. நான் சொல்வது அவன் காதில் விழவில்லை. சரி, வாங்க! போகலாம்!

ஹேமா! நான் நந்தினியை அவள் வீட்டில் விட்டு விட்டு நம் வீட்டுக்குப்-போகிறேன். எல்லோரும் சங்கரை சந்தோசப்படுத்த-முயலுங்க!
குட் பை! எனக்காக நீ தாமதிக்க-வேண்டாம்!
பார்ட்டி முழு உற்சாகத்
அடைந்தது-
ஒரு மணி நேரம் கழித்து-
மகேஷ் சார்! சங்கர் எங்கே? ரொம்ப நேரமா அவரைக்-காணவே இல்லை!
நடனம் நடந்ததால் அவனை மறந்தே விட்டேன்.
அதோ சங்கர்! எங்கோ போய்விட்டு-வருகிறார்!
சங்கர்! இங்கே வா! பேச்சில் கலந்து-கொள்!
பாத்ரூம் போய்விட்டு-வருகிறேன்!
15 நிமிடம் கழித்து-
ஏன் இன்னும் சங்கர் வர-வில்லை?
வாங்க! அவரை தேடிப்-பார்ப்போம்.

உள்ளே சாப்பிடும் அறையில்—
அடக்—கடவுளே! இதென்ன?
கொலை!
உடனே போலீசுக்கு சொல்ல—வேண்டும்!
இன்ஸ்பெக்டர் சம்பத் —பசினார்—
ஓட்டல் இமயத்திலா? இதோ நான் வருகிறேன்! யாரும் எதையும் தொட—வண்டாம்!
இன்ஸ்பெக்டர் சம்பத் வந்து பார்த்து—
இவரை கடைசியா உயிரோடு பார்த்தது—யார்?
15 நிமிடத்—துக்கு முன்னால் நாங்க எல்லோரும் பார்த்தோம்!
சரி! யாராவது ருவர், இந்தபார்ட்டி ற்றி முழு விவரமும் கொடுங்க!
என் பெயர் மகேஷ் சங்கருக்கு நான் மாமா!
புத்தாண்டு பிறப்பதற்கு முன் நடந்த அந்த மாறுவேட நடன விருந்து பற்றி மகேஷ் விவரித்தார்.
மிஸ் நந்தினி சங்கர் மீது கோபப்பட்டுக்—கொண்டு போனாளா?
ஆமா! சங்கருக்கு பாடம் கற்பிக்கப்—போவதாக கூறிச்சென்—றாள்!

சார் இதைப்— பாருங்க! இறந்தவர் கையில் இது— —இருந்தது!
கோ கெய்ன் மாத்திரைகள்! சங்கர் போதை மருந்து— —சாப்பிடுவாரா?
சாப்பிடவே மாட்டான் அதை கடுமையாக எதிர்ப்பவன்!
செவன் நாட் திரி! அதை பத்திரமா— —வைத்திரு!
சரி சார்! டாக்டர் வந்துகொண்டு இருக்கிறார்!
டாக்டர் வந்து பார்த்துவிட்டு—
இறந்து 15 நிமிடம் இருக்கும் என்றா— சொல்கிறீர்கள்?
ஆமா. அப்படிச்— சொல்ல 3 சாட்சியங்கள் இருக்கி— —றார்கள்!
இருக்க முடியாது. உடல் விறைத்துப்போய் காணப்— —படுகிறதே!
இறந்து ரொம்ப நேரம் இருக்குமா? சாட்சியங்கள் அப்படி சொல்ல— —வில்லையே!
இன்ஸ்பெக்டர்! பிரேத பரிசோதனை செய்துவிட்டு முழு— —அறிக்கை கொடுக்கிறேன்!
நன்றி டாக்டர்! சாட்சியம் அளித்தவர்— —களுக்கும் நன்றி.

போலீஸ் நிலையத்தில்—
சார்! இது மிஸ்டர் சங்கர் கையில் பிடிக்கப்—பட்டு இருந்தது!
பட்டனுடன் கூடிய துணி!
STATION
ஏதோ உடையில் இருந்து, பலமா இழுத்து கிழிக்கப்பட்ட மாதிரி —தெரியுது!
பார்த்து பழக்கப்பட்ட மாதிரி தெரியுது? இதை அணிந்து இருந்தது யார்? உம்...ஹேமா அணிந்து—இருந்தாளா?
சார், அந்த ஹேமாவா
நாளை விசாரித்தால் தெரியும்?
மறுநாள் காலை—
கொலையா? இதோ நான் அங்கே வருகிறேன். எதையும் தொடவேண்டாம்!
சார்! யார் கொலை!
மிஸ் நந்தினி! சங்கரின்—காதலி!
POLICE STATION
என்ன சார் இது?
தொடர்—கொலை!
நந்தினியின் வீட்டில் சம்பத்—
சார்! நான் நந்தினி அம்மாவின் வேலைக்காரி! பெயர் உஷா!
உஷா! என்ன நடந்தது?

சார்! விருந்துக்கு போன அம்மா நேற்று இரவு நடிகர் அருணுடன் லேட்டா வந்தாங்க!
அருண் போன பிறகு, அம்மா படுக்கப் போய்—விட்டார்கள்!
இன்று காலை காபியை எடுத்துக்கொண்டு, அம்மாவை எழுப்பினேன். பிறகு உங்களுக்கு போன் செய்தேன்.
சார்! பரிசோதனை செய்தீர்களா?
கோ கெய்ன் போதை விஷம்!
கோ கெய்ன் விஷமா? உஷா! உன் எஜமானி போதைமாத்திரை சாப்பிடு——வார்களா?
ஆமா சார்! அவர்கள், போதை மாத்திரைக்கு—அடிமை—ஆனவர்கள்!
இந்தப்——பெட்டி, நந்தினி உடையதா?
ஆமா சார்!
சரி உஷா: பிறகு வருகிறேன்!
செவன் நாட் திரி! நீ—என்னய்யா நினைக்கிறே!
சார் இது தற்கொலை! சங்கருக்கு நந்தினி பாடம் கற்பித்த முறை இது——தான்!

மகேஷ் சர்மா வீட்டில்-
இன்ஸ்பெக்டர் உட்காருங்க! உங்களுக்கு என்ன வேண்-டும்?
மிஸ்டர் சங்கரின் உறவினர்களில், உயிரோடு இருப்-பவர் நீங்கள் ஒருவர்-தான்!
ஆமா! இன்ஸ்பெக்டர்! என்ன விஷயம்?
ஒன்றும் இல்லை. அன்றைய விருந்-தில் உங்களுக்கும் ஒருவருக்கும் கை கலப்பு ஏற்பட்டு இருக்கு!
ஆமா! ஒரு வெயிட்டர் மரியாதை இல்லாமல் நடந்தான். நான் அவனை அடித்து-விட்டேன்.
நீங்க மிஸ்டர் சங்கருடன் சண்டை போடவில்-லையா?
இல்லை! இன்ஸ்பெக்டர்! நீங்க கூறும் குற்றச்சாட்டு என்ன?
ஒன்றும் இல்லை மகேஷ் சர்மா! உங்க உதவிக்கு நன்றி!
அருண் வீட்டில்-
மிஸ்டர் அருண்! நந்தினியை அவள் வீட்டில் விட்டு-விட்டு, நேரே இங்கே வந்து விட்டீர்கள். அப்படித்தானே!
ஆமா சார்!
நீங்க கன்னியாஸ்திரி மாதிரியும், அருண் பாதிரியார் மாதிரியும் வேஷம் போட்டு--இருந்தீர்கள். இல்லையா?
நான் அந்த உடை-களைப் பார்க்க-வேண்டும்.

இதுதான் என் கணவர் கிறிஸ்தவ சாமியாராக போட்டு இருந்த சட்டை
அப்படியா?
நான் இதை அணிந்து-இருந்தேன்!
ஹேமா! இந்த சட்டையில் ஒரு பட்டன் இல்லாமல் இருக்கிறதே!
ஆமா! நடனத்தின் போது பிய்ந்து-விட்டது! அதைக்-வைத்து இருக்கும் படி சங்கரிடம் கொடுத்தேன்!
அப்ப-டியா? நன்றி. வருகி-றேன்.
செவன் நாட் இரி! ஹேமா பொய் சொல்-றாள்!
எதை வைத்து சொல்றீங்க சார்!
அவள் அணிந்த சட்டையில் எல்லா பொத்தான் துவாரங்களிலும் தையல் கச்சிதமா இருக்கு. எனவே பட்டன் வெட்டி எடுக்கப்பட்டு-இருக்கு. தானாக, பிய்ந்து-கொள்ளவில்லை!
சார்! ஒரே குழப்பமா இருக்கு!
இல்லை! இப்போதான் விஷயம் தெளிவா-விளங்குது!
அப்படியா? எனக்கு புரியவில்லை!

ஓட்டல் இமயத்தில்-
அவர்கள் இங்கேதான் விருந்து சாப்பிட்டனர்!
நாம் இங்கே எதுக்கு சார் வந்து - இருக்கிறோம்?
முழுநீள திரைச்சீலை! இதன் பின்னால் போதிய -இடமா இருக்கு! இப்போ- -வாவது உனக்கு புரிகிறதா!
சார்! என் மூளைக்கு எட்ட- -வில்லை!
வா! நான் ஒரு உத்தி- செய்கிறேன்!
என்ன உபாயம் சார்?
விருந்தில் கலந்து கொண்டவர்- களுக்கு தனித்தனியா இன்ஸ்- பெக்டர் சம்பத் போன் செய்தார்-
சங்கர் கொலை பற்றி விசாரிக்க- -வேண்டும்! இன்று மாலை 6 மணிக்கு போலீஸ் ஸ்டேஷன் வாங்க!
அன்று மாலை-
இன்ஸ்பெக்டர் இதெல்லாம் என்ன?
பொறுமையா இருங்க. விவரம் சொல்றேன்!
பிறகு எல்லா விளக்குகளையும் அணைத்தார். பிரகாசமான ஒரு விளக்கைப் போட்டார்!
இப்போ, அன்றைய விருந்தில் நீங்க போட்ட வேஷங்கள் ஒன்றன் - -பின் ஒன்றாகபோகும். கவனமா பாருங்க!

முதலில் பாதிரியார் உருவம்-
அதை கன்னியாஸ்திரி பின் தொடர-
பிறகு ராணி, ஜெனரல், ஜிப்சி ஆகியோர் தோன்ற- கடைசியில் மாலுமி திரையில் தோன்றினார்.
பிறகு இன்ஸ்பெக்டர் சொன்னார்-
நீங்க எத்தனை உருவங்களை பார்த்தீர்கள்?
ஆறு உருவங்கள்!
ஆறு உருவங்கள் என்பதை அனைவரும் ஒப்புக்--கொள்கிறீர்களா?
ஆமா. ஆமா. மொத்தம் 6 உருவங்களே!
ஊகூம்... நீங்க சொல்வது தவறு. விருந்து அன்றைக்கு இதேபோல் உங்கள் கண்கள் ஏமாற்றப்பட்டன!

யார் இது? இது பாதிரியாரா?
ஆமா. பாதிரி யார்தான்.
மீண்டும்
திடீர் என்று—
மாலுமி!
மிஸ்டர் அருண்! சங்கரை கொலை செய்த குற்றத்துக்காக உங்களை கைது செய்கிறேன்!
என்ன?
பிறகு—
சார்! அருண் மீது எப்படி சந்தேகம் கொண்டீர்கள்?
நந்தினி, போதைப்—பொருளால் இறந்து இருக்—கிறாள். ஆனால் அவளது போதைமாத்திரைபெட்டி சங்கரிடம் இருந்தது.
எனவே அவள யாரிடம் இருந்து போதைமாத்திரை பெற்று இருப்பாள்?
அருண் இடம்—இருந்து—தான்!
ஆமா. அருண், போதைப் பொருட்—களை விற்கும் தொழி—லும் நடத்தி வந்து இருக்கிறான் நந்தினியை போதைக்கு அடிமை ஆக்கியதும் அவனே!

அதை கண்டு பிடித்த சங்கர், நந்தினிக்கு மாத்திரை கொடுக்காதே; இல்லை உன்னைப் பற்றி போலீசில் சொல்வேன் என்று மிரட்டி இருப்பார். தான் பிடிபடுவோம் என்று பயந்த அருண், சங்கரைக் கொலைசெய்ய வேண்டியதாகி விட்டது!
விருந்துக்குப் பிறகு சங்கரை அருண் கொலை செய்து, பிணத்தை திரைச்சிலைக்குப் பின்னால் மறைத்து வைத்தான். பிறகு நந்தினியை வீட்டில் விட்டுவிட்டு, மீண்டும் ஓட்டலுக்கு வந்து மறைந்து கொண்டான்!
அதன்பின் பாதிரியார் வேடத்தை கலைத்துவிட்டு, மாலுமி வேடம் போட்டான். அதற்கான உடையை பாதிரியார் உடைக்குள் ஏற்கனவே அணிந்து இருந்தான்.
பிறகு அருண் உள்ளே சென்று சங்கர் உடலை திரைக்குபின் இருந்து இழுத்து ஆள் இல்லாத ஒரு அறையில் போட்டுவிட்டு, பாதிரியார் வேடத்தில் போய்விட்டான். நடன மும்முரத்தில் யாரும் கவனிக்கவில்லை!
அந்த பட்டன் விஷயம் என்ன சார்?
கொலை நடக்கும்போது சங்கரால் இழுத்து எடுக்கப்பட்டதாகும். அருண் உடையில் கிழிசல் நாசுக்காக ஒட்டுப் போடப்பட்டு இருப்பதைக் கவனித்த நான் அவன் மீது சந்தேகம் கொண்டேன்!
நந்தினி இறந்தது எப்படி?
POLICE STATION
சங்கருக்கு பாடம் கற்பிக்க நிறைய போதை மாத்திரை சாப்பிடும்படி அருண் கூற, அந்த அப்பாவி நிறைய சாப்பிட்டு செத்துவிட்டாள்.
அந்த அருண் புத்திசாலிதான்.
ஆனா உங்க அளவுக்கு இல்லை!
முற்றும்!

# ஜூலி தோன்றும் கடல் புதையல்!

இதற்குமுன், ஜூலி தோன்றிய, "பீரங்கிக் கோட்டை!" சித்திரக் கதையை படித்து இருப்பிர்கள். அந்தக் கதையின் இறுதியில், ஜூலி சென்ற பலூனை பீரங்கிக் குண்டு தாக்குகிறது. அதனால் அவள் கடலில் விழுகிறாள். கடலில் அவள் தத்தளித்துக் கொண்டு இருந்த போது. அங்கே ஒரு படகு வருகிறது...

அந்தப் படகைப் பார்த்த ஜூலி—
உதவி! உதவி!
ஏய் ஸ்டீவ்! அங்கே ஒரு உருவம் காணப்படுகிறது! படகை அங்கே செலுத்துகிறேன்.
வேண்டாம்! வழியை மாற்றாதே!
ஸ்டீவ்! என்ன விஷயம்?
ரிக்கி! ஒரு பலூன் கடலில் இறங்கி இருப்பதை கிட் பார்த்து இருக்கிறான். அதனால் படகை அங்கே கொண்டு போகிறான். நான் வேண்டாம் என்கிறேன்!
கிட்! படகை அங்கே கொண்டு போக வேண்டாம்! அந்த பலூன் ஏதாவது சோதனைக்காக விடப்பட்டதா இருக்கும்!

பலூனில் யாரோ இருப்பதாக தெரிகிறது. ஆபத்து என்றால் காப்பாற்ற வேண்டாமா? நமக்கும் அது போல் ஆபத்து ஏற்படாதா?
சரி! படகை அங்கே கொண்டு—போ!
ஸ்டீவ்! அந்தப் படகில் ஒரு ஆள் இருப்பது தெரிகிறது! போய் காப்பாற்று—வோம்!
காப்பாற்றினால், பிறகு அந்த ஆளை கரையில் கொண்டு போய் விட வேண்டி—இருக்கும்!
அதனால் காலதாமதம் ஆகும்!
நாம் அவசரமாக போய்க்கொண்டு இருக்—கிறோம். தாமதம், நமக்கு பாதகம்!
அந்த ஆளை நம் படகிலும் வைத்துக்கொள்ள முடியாது!

ரெண்டு பேரும் வாயை மூடுங்க. ஆபத்—துக்கு பாவம் இல்லை. அந்த ஆளை காப்பாற்றுவது நம் கடமை!
அங்கே கடலில் தத்தளிப்பது ஒரு பெண்!
உதவி! உதவி!
உம்... மெள்ள ஏறு! ஸ்டீவ் ஒரு கம்பளியை எடு!
தனியா எப்படி?
கம்பளியும் டீயும் கொண்டு வா! ஸ்டீவ்! இட் சொல்றபடி செய்!

இந்த பெண்ணை நாம் என்ன செய்—யலாம்?
அது பற்றி நாம் யோசித்துதான் முடிவு எடுக்க—வேண்டும்!
பெண்ணே! குளிர் போய்விட்டதா? என் பெயர் கிட். இந்தப் படகு எனக்குச் சொந்த—மானது!
அப்படியா? என்னைக்—காப்பாற்றி உதவியதற்கு நன்றி!
என்னை கரையில் சேர்த்தீர்கள் என்றால் இன்னும் நன்றி உடைய—வனாக இருப்பேன்! என் பெயர் ஜூலி!
இவர்களை அறிமுகப்படுத்து—கிறேன். இவர், ஸ்டீவ். அவர் ரிக்கி.

இவர்கள் இருவரும் இந்தப் படகை அமர்த்தி இருக்கிறார்கள்!
ஹலோ! ஹலோ!
சார்! நீங்க ரெண்டு பேரும்தான் இந்தப் படகை வாடகைக்கு அமர்த்தி இருப்பதாக மிஸ்டர் கிட் கூறுகிறார். ஆகையால் என்னை கரை சேர்க்க நீங்க அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்!
அது இப்போ முடியாது. நாங்க ஒரு இடத்துக்கு அவசரமா போய்க்கொண்டு இருக்கிறோம்!
ஸ்மைக் சொல்வது சரி! ஒவ்வொரு நிமிடமும் எங்களுக்கு முக்கியம். அதனால் நீ எங்களுடன்தான் இருக்க வேண்டும்!

ரிக்கி! இவளை நம்முடன் அழைத்துச் சென்றால், இவளை நம்முள் ஐக்கியப் படுத்திக்கொள்ள வேண்டும்!
நான்தான் அவளை முதலில் பார்த்தேன்
ஜூலி! இவன் சொல்வதை நம்பாதே. உன்னைக் காப்பாற்றுவதை கடுமையாக எதிர்த்தவன் இவன்தான்!
ரிக்கி! நீ இப்படி என்னை அவமானப்படுத்துவதை நான் விரும்பவில்லை!

நானா பொய் சொல்கிறேன். உன் நாக்கை பிடுங்குகிறேன் பார்!
நிறுத்துங்க. நீங்க வீணா சண்டை போடுவதை விட்டுவிட்டு அடுத்த துறையில் என்னை இறக்கி-விடுங்க!
முடியாது!
ஏன் முடியாது?
சற்றுநேரம் கழித்து—
மிஸ் ஜூலி! இந்தப் பயணம் இனிமை ஆகிவிட்டது. சிகரெட் வேண்டுமா?
வேண்டாம். எனக்கு ஒரு விஷயம் தெரிந்தாக வேண்டும்!
அதுபற்றி பிறகு பேசலாம். உன்னைக் கண்டதும் நான்தான் காப்பாற்ற-துடித்தேன். படகை உன் அருகே கொண்டு-வந்ததும் நான்தான்!

உனக்கு தேவை இல்லாததை ஏன் பேசுகிறாய்?
எனக்காக நீங்க ரெண்டு பேரும் சண்டை போடுவதை நான் விரும்பவில்லை!
இருவரும் சண்டையை நிறுத்தாததால்—
உம்... ரெண்டு பேரும் குழந்தைகள் மாதிரி சண்டை போடுகிறீர்கள். இது கேவலமானது. எனக்கு பசிக்கிறது. சாப்பிட ஏதாவது கொடுங்க!

சண்டை போடாமல் இருங்க. நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்.
பிறகு
இந்த ஜூலி சினிமா நடிகை மாதிரி அழகா இருக்கா.
ஸ்டீவ்! நீ தயார் செய்த சாப்பாட்டை அவன் சாப்பிடுகிறான். சீக்கிரம் வாந்தி பண்ணு-வான். அதனால் உன்னை வெறுப்பான். உன் சமையலே உனக்கு எதிரி!
மறுநாள் காலை-
குட் மார்னிங் ஜூலி! நான் ஏற்படுத்தி கொடுத்த தடுப்பு. கிட்,ஸ்டீவ் இவர்கள் கண்--ணில் படாமல் தனிமையில் நீ தூங்க வசதியா இருந்து--இருக்குமே!
ஜூலி! அவங்க ரெண்டு பேரையும் நான் நம்புவது இல்லை!
பிறகு ஏன் அவர்களுடன் சேர்ந்து பயணம் செய்கிறீர்? நீங்க மூவரும் எங்கே போகிறீர்கள்?

ஜூலி இங்கே வா சொல்கிறேன்! அதோ தெரிகிறது பார் ஒரு தீவு. அதன் அருகே ஸ்பெயின் நாட்டு யுத்தக் கப்பல் ஒன்று பொக்கிஷத்துடன் மூழ்கி கிடக்கிறது!

அந்த பொக்கிஷத்தில் பெரிய, பெரிய எமரால்டு வைரங்கள் எல்லாம் இருக்கு அதனால எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

அந்த இருவரையும் நீர்த்துக்கட்டிவிட்டு, அந்த பொக்கிஷத்தை நீயும் நானும் எடுத்துக் கொண்டால் என்ன?

இருவரையும் அவர்களுக்குத் தெரியாமல் தலையில் அடித்து, கடலில் தூக்கி போடுவோம். கடல் நடுவில் நடக்கும் இந்த குற்றத்தை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.
அதைக் கேட்டு ஆத்திரம் அடைந்த ஜூலி—
தட்! தப்!
ரிக்கி மேலே விழுந்தான்—
அந்த ரிக்கி உன்னை கஷ்டப்படுத்துகிறானா ஜூலி?
ஆமா. நீங்க ரெண்டு பேரும் கொஞ்சம் அசந்தால் உங்களை தீர்த்துவிடுவார். அவருக்கு குறி பொக்கிஷம்தான்!
அப்படியா உன்னிடம் கூறினான்?
ஆமா. நீங்க எச்சரிக்கையா இல்லாவிட்டால், ஆபத்து!

ஜூலி! அதுதான் நடக்காது. அந்த பொக்கிஷம் எங்கே கிடக்கிறது என்ற உண்மை எனக்கு மட்டுமே தெரியும். நான் இல்லாமல் கடல்அடி புதையலை அவனால் எடுக்க முடியாது!
உன்னுடன் சேர்த்து திட்டம் தீட்டியவன் நான்! நான்தான் இதற்கு காரணகர்த்தா!
நான் இல்லாமல், என் உதவி இல்லாமல் இந்தப் புதையல் இட்-டத்தை உன்னால் உரு-வாக்கவும் முடியாது. அதை எடுக்கும் ஆற்-றலும் உனக்கு இல்லை!
உம்... என் உதவி இல்லாமல், அந்த புதை-யல் இருக்கும் இடத்தை உங்களால் நெருங்கக் கூட முடியாது!
மூவரும் வாயை மூடுங்க! நீங்க பேசும்-பேச்சு என்னை எரிச்சல் அடையச் செய்கிறது!

ஜூலி ஒரு திட்டம் தீட்டினாள்.
இந்த நிமிடத்தில் இருந்து, அந்த பொக்கிஷ கப்பல் பற்றி எல்லா தகவல் களையும் என்னிடம் சொல்லி ஆக வேண்டும்!
மிஸ்டர் ஸ்டீவ்! இங்கே வாரும்!
இருவரும் பேசினர்-
ஜூலி! நானும் ரிக்கியும் ஒன்றுவிட்ட சகோதரர்கள்! எங்களது வயதான மாமா சாகும்போது எங்கள் இருவரிடம் ஆளுக்கு ஒரு லாக்-கெட்டை கொடுத்தார்.
என்னிடம் இருந்த லாக்கெட்டில் கடல் புதையல் இருந்த இடம் குத்துமதிப்பாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

ரிக்கியிடம் இருக்கும் லாக்கெட்டில் புதையல் இருக்கும் இடம்பற்றி துல்லியமாக காட்டப்-பட்டு உள்ளது. இரு லாக்கெட்டின் உதவியால்தான் புதையலை எடுக்க முடியும்!
நீங்க ரெண்டு பேரும் ஒருவரை ஒருவர் நம்ப-வில்லை. அதனால் இருவரும் லாக்கெட்டை என்னிடம் கொடுத்துவிடுங்க!
அடுத்து—
ரிக்கியிடம் வாங்கு!
ரிக்கி! உம்மிடம் இருக்கும் லாக்கெட்டை என்னிடம் கொடுத்து-விடுங்க!
ஜூலி கிட்டிடம் வந்தாள்.
ஜூலி! அவர்கள் இருவர் சண்டையையும் தீர்த்துவிட்டாய் போல தெரிகிறதே!
ஆமா! நான் மட்டும் இங்கே வந்திராவிட்டால் இவர்கள் சண்டை போட்டு செத்து-இருப்பார்கள்!
நான் இங்கே வந்தது உங்களுக்கு அதிர்ஷ்டமாகிவிட்டது. என்னால் உங்களுக்கு லாபம்!

மிஸ்டர் கிட்! இனி அந்த தீவு அருகே படகை செலுத்தும்!
ஜாலி! அந்த கடல் புதையலை எடுத்து விடலாமா?
அந்தக் கவலையை விடுங்க. இனி நான் சொல்கிறபடி கேளுங்க!
புதையல் இருக்கும் இடத்தை கச்சிதமாக் கண்டு பிடிக்க வசதியாக ரெண்டு லாக்கெட்டுகளும் என்னிடம் உள்ளன!
ஜாலி! இதுதானே அந்த இடம்?
ஸ்டீவ்! ரிக்கி! ரெண்டு பேரும் நல்லா கேட்டுக் கொள்ளுங்க!
புதையல் கிடக்கும் இடத்தை சொல்லுகிறேன்! அதன்படி இருவரும் கடல் அடியில் போய் அந்த இடத்தைக் கண்டுபிடியுங்க!

இந்தப் புதையலில் எனக்கு பங்கு கிடையாதா?
இது வரை இல்லை. நீர் கப்பல் சுக்கானை— —பிடியும்!
ஸ்டீவ், ரிக்! அதோ ஒரு பாறை தெரியுது பாருங்க. அதன் அடியில்— —தேடுங்க!
அந்தப் பாறையில் இருந்து 40 தடவை கையால் அடித்து நீந்தும் தூரத்தில் புதையல் கிடப்பதாக லாக்கெட்டில் காட்டப் —பட்டு உள்ளது!
2 லாக்கெட்டையும் வைத்து, ஜூலி கூறிய இடத்தில் இரு —வரும் குதித்தனர்.

மிஸ்டர் கிட்! பொறுமையாக இரும்! அவர்கள் விடிய விடிய நீந்தினாலும் சரியான இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியாது!
ஜூலி! நீ அப்படி சொல்ல காரணம் என்ன? புதையல் உள்ள இடத்தை அவர்களிடம் நீ சொல்லவில்லையா?
அதுபற்றி இப்போ பேச வேண்டாம் நங்கூரத்தை பாய்ச்சுங்க!
நீர், ஆரம்பத்திலேயே அவர்களிடம் பங்கு கேட்டு இருக்க வேண்டும்!
இங்கேதானே அந்த புத்த கப்பல் உடைந்து கிடக்க வேண்டும்! இங்கே பாறையைத் தவிர வேறு ஒன்றும் இல்லையே!

அவர்கள் வெகுநேரம் தேடியபின் ஸ்டீவ் ஒரு குகையை கண்டுபிடித்தார்.
ஸ்டீவ்! எதையோ சுட்டிக் காட்டு -றானே! குகையையா?
நீ தடியாக இருப்பதால் நுழைய -முடியவில்லை. வெளியே வா. நான் நுழைகிறேன்!
பிறகு-
என்னாலும் நுழைய முடிய வில்லையே!
இருவரும் மேலே வந்தவர்கள்-
என்ன! கண்டுபிடித் -தீர்களா?
இல்லை! அங்கே ஒரு குகை இருக்கு. இட் -நீ உதவினால் உள்ளே நுழைய முடியும்!

லாக்கெட்டுகள்படி நாம் சரியான இடத்தில் மூழ்கி இருக்கிறோம். ஆனால் மேழ பாறை-யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஸ்டீவ்! நீ என்ன-சொல்கிறயாய்?
ஏதாவது நிலச்சரிவு ஏற்பட்டு உடைந்த கப்பலை மூடி இருக்க-வேண்டும்!
குகை இருப்பதாக சொன்னாயே! அதனுள் போய் பார்க்க-வில்லையா?
இல்லை. அது ரொம்ப சிறிதா-இருக்கு!
சரி! நான் போய் பார்க்கிறேன்!
பிளாஷ்
ரிக்! இட்டை நம்ப முடியுமா?
முடியாது!
இவர்களையும் அனுப்பி-வைக்கிறேன்!

இட்டை நீங்க நம்பவில்லை என்றால், நீங்களும்போய், அவரை கண்காணியுங்க! உம் குதியுங்க!
பிளால்! பிளால்!
நான் கொஞ்சம் காபி தயார்-செய்கிறேன்!
அதே நேரத்தில் இட், ஸ்டீவ், ரிக்கி மூவரும் ஆழ்கடலில் மூழ்கி அந்தக் குகையை தேடினர்!

வெகுநேரம் கழித்து-
ரிக்கி! என்ன ஆச்சு! குகைக்குள் போனீர்களா?
முடியவில்லை. அந்த குகையை வெடிவைத்து தகர்க்க 10 டன் வெடி மருந்தாவது தேவைப்படும்!
அப்படி தகர்த்தால், இன்னொரு நிலச்சரிவு ஏற்படும். புத்திசாலி தனமாபேசு!
அந்த குகைக்குள் நுழையும் அளவுக்கு நாம் ஒல்லியாக இல்லை.. கொஞ்சம்பொறு...!
ஜூலியை குகைக்குள் அனுப்பினால் என்ன?
ஆமா!
சரியான யோசனை!

ஜூலி! நீ அந்தக் குகைக்குள் எளிதாக நுழைந்துவிடலாம்!
ஆமா! ஜூலிக்கு நீந்தும் உபகரணங்களை கொடு!
ஜூலி! நான் உனக்கு துணையாக நீந்தி வருகிறேன்!
வேண்டாம்! நான் துணைக்கு போகிறேன்!
நீங்க ரெண்டு பேரும் வேண்டாம். நான் போகிறேன்!
எல்லோரும் வாயை மூடுங்க!

நீந்தும் உடை, ஆக்சிஜன் சிலிண்டர் ஆகியவற்றை கொடுங்க. நானே நீந்திப்போகிறேன். நீங்க யாரும் வர—-வேண்டாம்!
ஜூலி! நல்லா யோசித்து சொல்! உனக்கு துணையே வேண்டாமா?
வேண்டாம்!
மூன்று பேரும் மேலே இருங்க. நான் 10 நிமிடத்தில் வருவேன்!
அவர்கள் மூவரும் சொன்ன குகை எங்கே? இதுதானா?

உம்... குகைக்குள் என்னால் நுழைய- -முடியுமா பார்க்கிறேன்!
பாறை அடியில் இருக்கும் இந்தக்- -குகைக்குள் அவர்களால் நுழைய முடியாது!
அதோ அது என்ன? பாறை மாதிரி தெரியவில்லையே! அருகில் போய்- -பார்க்கிறேன்.
கப்பல் கொடிக்கம்பத்தின் உச்சிப்பகுதி போல் தெரியுது!

லாக்கெட்டில் உள்ள தகவல் சரியானது. இதுதான் உடைந்துபோன யுத்த கப்பல் கிடக்கும் இடம். இங்கேதான் அளப்பறியா பொக்கிஷம் புதைந்து -கிடக்கவேண்டும்!
இதுதான் கப்பல் கேப்டன் வசித்த அறையாக இருக்க வேண்டும். அவர், பொக்கிஷத்தை தன்படுக்கை அடியில் வைத்து இருக்க -வேண்டும்.
இந்த பாறைகள் சரிந்து விழுந்து அதை இப்போ மறைக்கிறதோ? ...இது என்ன? ஆ!
ஜூலியின் கண்களை அவளாலேயே நம்ப முடியவில்லை!

உம்... இதுதான் பொக்கிஷம் உள்ள பெட்டியாக இருக்க வேண்டும். 400 ஆண்டுகள் கடல் அடியில் கிடந்து இருக்கே!
நேரம் ஆகிக்கொண்டு இருக் மேலே இருந்தவர்கள் பொறுமை இழந்தனர்.
இன்னும் 2 நிமிடத்தில் அவள் வராவிட்டால், நா போய் பார்ப்பேன்!
கிட்! அது உன் வேலை அல்ல. நீ கப்பலை கவனி!
நான்தான் இந்த படகின் கேப்டன்! நான் சொல்கிறபடிதான் நீங்க கேட்கவேண்டும்!
வாயை மூடு! உனக்கு வாடகைதான பேச்சு. அதோ அவள் வந்துவிட்டாள்!
ஜூலிக்கு ஒரு கைகொடுத்து தூக்கி விடு! அவள் எதையே எடுத்துக்கொண்டு வருகிறாளே!

இமே குகைக்குள் ஒரு பெட்டியை ார்த்தேன். திறக்கமுடியவில்லை! ஒரு பக்கம் கொஞ்சம் நசுங்கி உடைந்து இருந்தது அதில் இருந்து இதை மட்டும் எடுத்தேன்!
ஸ்டீவ்! இது என்ன என்று கண்டு பிடியுங்க பார்க்— —கலாம்.
ஏதோ ஒரு நகை—யின் தொங்கட்டம் மாதிரி தெரியுது!
:! இது எமரால்டு வகையைச் ர்ந்த வைரம்! ஜூலி நாம் தடிய புதையல் இருப்பது அந்த பெட்டியில்தான்!
ஜூலி! உடனே குதி! அந்த பெட்டியை இழுத்து வா!
குகை வாசலில் நாங்கள் வாங்கிக் —கொள்கிறோம்!
கொஞ்சம் பொறுங்க. இப்போ நான் கொஞ்சம் பேசணும். புதையலில் எனது பங்கு— —எவ்வளவு?

ஜூலி! இப்படி இக்கட்டான நேரத்தில் நாம் பங்கு பற்றி—-பேசமுடியாது!
இல்லை! இந்த மாதிரி நேரத்தில்தான் பேசவேண் நான் இல்லாமல் இந்தப் பு -யலை உங்களால் எடுக்கமு -யாது. அதனால் எனக்கு ஒரு பங்கு வேண்டும்!
எனக்கு 4-ல் ஒரு பங்கு கொடுக்காவிட்டா நான் குகைக்குள் நுழை அந்த பெட்டியை -வரமாட்டேன்!
சரி! உனக்கும் பங்கு உண்டு!
நீ கேட்டபடி 1/4 பாகம் தருகி-றோம்.
ஆமா! படகு கொடுத் உதவிய இவருக்கும் கா பாகம் கொடுக்க வேண் இல்லாவிட்டால் இங்கு இருந்து திரும்ப -யாது! நால்வருக்கும் தலா கால் பங்கு! அதுதான் சரி!
எனக்கும் கால்-பாகம் கொடுக்க வேண்டும்... இல்லை...

_னே ஜூலி மீண்டும் ய்யணீருக்குள் இறங்கத் ாடங்கினாள். படகில் ந்து மூவரும் மகிழ்ச்சி ல் திளைத்தனர்.
ஏய்! பாருங்கடா! அருமையான வைரம்! நாம் கோடீஸ்வரர்--ஆகிவிடலாம்
ஒவ்வொரு வைரமும் சிறிய முட்டை அளவுஇருக்கும்என்று மாமா கூறினார். சந்தேகம் இல்லாமல் நாம் கோடீஸ்வரர்--கள் தான்.
வர் கீழே இறங்கிச் சென்று குகை வாயிலில் பெட்டியை வாங்கி- லே கொண்டு வந்தனர். பிறகு-
ஜூலி! இந்த வைர ரணங்களை நீயே நாலாக ரித்து கொடுத்து விடு!
ஜூலி! கடலில் தவித்த உன்னை காப்பாற்றியது நான்தான் என்பதை மறந்து--விடாதே!
போச்சுடா!

ஜூலி! இந்த கூட்டத்தில் படித்தவன் நான் தான். அதை நினைவில் வை!
ஜூலி! இந்த படகின் உரிமையாளர் நான்தான்!
வாயை மூடுங்க! எதிரே ஒரு கப்பல் வருகிறது!
ஜூலி! உனக்கு தகுந்தவன் நான்தான்!
இந்த புதையலை உடனே மறைத்து வையுங்க.
எதிரே வந்த கப்பலில், அந்தப் படகு பற்றி பேச்சு நடந்தது.
அந்த படகை அங்கு இருந்து போகச் சொல். அவர்கள் கேட்கும் பணத்தை கொடுத்து விடு! உடனே அவர்கள் போய் விட வேண்டும்!
சரி, மிஸ்டர்-பிம்லிகோ!

எல்லோரும் வாயைமூடிக்கொண்டு இருங்க. புதையல் பற்றி மூச்சுவிடாதீங்க! படகில் ஒரு ஆள் நம்மிடம் வருகிறார்.
குறுக்கிடுவதற்கு- -வருந்துகிறேன். இங்கே சினிமா படப்பிடிப்பு நடத்த வந்து இருக்கிறோம். அதற்கு உங்க படகு இடைஞ்சல் இருக்கு!
ஓ! ஜார்ஜ்!
ஜூலி நீயா?
ஓ! ஜார்ஜ்! உங்களை மீண்டும் சந்தித்ததற்கு- -கடவுளுக்கு நன்றி!
ங்கே வந்தது ஜூலியின் காதலன் ஜார்ஜ்!

ஜூலி! உன்னை எங்கெல்லாம் தேடினேன் தெரியுமா?
ஜார்ஜ்! இனி என்னைவிட்டு-போகாதீர்கள். சினிமா கம்பெனியிலா சேர்ந்து இருக்கிறீர்கள்?
ஆமா ஜூலி! நீ இந்த மூன்று பேர்களுடன் இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?
ஒரு புதையலை எடுக்கும் சந்தர்ப்பம் இவர்களுடன் சேர்ந்ததால் ஏற்பட்டது. அதில் கால்--பங்கு எனக்கு உரியது. அதை எடுத்துக் கொண்டு நாம் கிளம்பலாம்.
சரி! ஜூலி. அதை--வாங்கு!
பை கிப்! பை ரிக்கி! பை ஸ்டீவ்! உங்க--மூன்று பேருக்கும் நன்றி!
ஜூலி!

ஜார்ஜ்! இந்த வைர ஆபரணங்களை விற்று நாம் பணக்காரர் ஆகலாம். இதை என் வரதட்சணையாக கூட வைத்துக்கொள்!
ஜூலி! அப்படி சொல்லாதே! நாம் விரைவில் திருமணம் செய்துகொள்வோம். எனக்கு வேலை பார்க்க பிடிக்கவில்லை. சொந்தத் தொழில் செய்து சந்தோசமாக வாழ்வோம்!
ஆமா! ஜார்ஜ்! எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?
ஜார்ஜ்! நாம் உடனடியாக கரைக்கு திரும்ப முடியாதா?
ஜூலி! நான் அந்த படக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து இருக்கிறேன். இப்போது செல்வம் கிடைத்து விட்டது என்பதற்காக அந்த ஒப்பந்தத்தை இடையில் முறிக்கமாட்டேன். வந்த வேலையை முடித்துவிட்டு கரை திரும்பி, பின் திருமணம் செய்துகொள்வோம்!
சரி! ஜார்ஜ். சரி!
முற்றும்!

# வக்கீல் வேலை!


ஜானி என்ற அந்த பண்ணை அதிபர், காட்டில் திரிந்து கொண்டிருந்
ஒரு மாட்டை பிடித்துக் கொண்டு இருந்தார். அப்போது 2 பேர்
அங்கே வந்தனர்.

அந்தப் பகுதிக்கு புதியவர்களான அவர்கள் களைத்துக் காணப்பட்டனர்.
நாங்க, சான்மைக்கிலோ போகணும்.
சரியான வழியை காட்ட முடியுமா?
வழியை சொல்கிறேன்...
ானி சொல்வதை இருவரும் கேட்டனர்.
அந்த ஆல்காலி பாலைவனத்தின் குறுக்காக பயணம் செய்து, தென் திசையில் போங்க.
100 மைல் பயணம் செய்ய வேண்டும். மேற்கு திசையில் போனால் 300 மைல் போகணும்!

அதைக் கேட்டு இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்—
—கொண்டனர்.
பாலைவனம் வழியாகவே போவோம். அதுதான் தூரம் குறைவா தெரியுது!
ஆனா அந்த பாலை—வனத்தில் தண்ணீரே கிடையாது. அதை மனதில் வைத்துக்——கொள்ளுங்க!
இருவரும் புறப்பட்டனர்.
கஷ்டப்——பட்டு பாலை வனம் வழியாகவே போகிறோம்!
பாலைவனத்தில் ரொம்ப வெப்பமாகவும் இருக்கும். கொஞ்சம் இளைப்பாறிவிட்டு போங்க!

ிருவரும் ஒரு நிழலில் ாமதித்தனர்.
அவர்களிடம் நிறைய தண்ணீர் இருக்கு. அதை எடுத்தால் என்ன?
இங்கே சண்டை-வேண்டாம்!
டாம்! நீ பண்ணைக்குப் போ! நான் காக்டஸ் நகருக்கு போய்விட்டு வருகிறேன். என் தாத்தா உயில்படி உள்ள பணம் வக்கீல் டல்லாசிடம் இருக்கு. வாங்கி-வருகிறேன்.
சரி! போய்விட்டு வா!



காக்டஸ் நகரில். வக்கீல் வீட்டின்முன் சிலர் சோகத்துடன் கூடி நிற்பதை ஜானி பார்த்—தார். ஷெரீப் அமர்ந்து இருந்தார்.
ஷெரீப் சார்! என்ன விஷயம்?
ஜானி! வக்கீல் டல்லாசை பார்க்கவா வந்தாய்?
BILL DALLAS
வக்கீலிடம் பணம் வாங்க வந்த விஷயத்தை ஜானி சொல்ல—
வக்கீலை நேற்று இரவு யாரோ கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டனர்.
வக்கீல் டல்லாஸ், மிகவும் நல்ல மனிதர் அவரையா...?

அப்போது வக்கீல் குமாஸ்தா எபி அங்கே வந்து—
வக்கீல் நேற்று இரவு வெகுநேரம் வேலை செய்து இருக்கிறார். அவரிடம் பண்ணை அதிபர் ஜேகேயின் பணம் 20 ஆயிரம் டாலர் இருந்து இருக்கு. அதை யாரோ கொள்ளை— —அடித்துவிட்டு— -போய்விட்டனர்.
எனவே உங்களுக்கு பணம் கிடைக்காது!
ண்ணை அதிபர் ஜேகே, தன் பணம் முழுவதையும் ரொக்கமாக வக்கிலிடம் கொடுத்து, உயில் எழுதி கொடுத்து ிட்டு இறந்துவிட்டார். இப்போது க்கிலும் கொலை செய்யப்பட்டு ிட்டார்.
யார் கொலை செய்தது?
சரியான சாட்சியம் இல்லை.
இந்த ஊரில் நேற்று இரண்டு அன்னியர்கள் தங்கி இருக்கிறார்கள்.
இரு அன்னியர்களா? ஒருவன் தடியாகவும் பெரிய பல்லுடனும் இருப்பானா? இன்னொருவன் ஒல்லியா கத்தி வைத்து இருப்பானா?
ஆமா.

கோபம் கொண்ட ஜானி, உடனே குதிரையில் ஏறினார்.
அந்த அன்னியர் இருவரும் பாலைவனம் வழியாக சான்மைக்கிலோ நகருக்குப் போகிறார்கள். ஷெரீப்! வாங்க போய் பிடிப்போம்!
சரி! சில ஆட்களுடன் போவோம்!

அப்போது வக்கீல் குமாஸ்தா எபி ஏதோ முடிவில் திரும்பினார்.
பீட்டர்! ஜாக்! நீங்க ரெண்டு பேரும் வாங்க!
ஷெரீப்! எனக்கு சரியா கூட வராது!
நான் குடும்பஸ்தன்! என்னை விடுங்க!

கொலை காரர்களை பிடிப்பதில் தயக்கம் ஏன்?
நான் பயப்பட மாட்டேன்!
சரி, ஷெரீப்! நான் உங்களுடன் வருகிறேன்!

யாக நின்றிருந்த ஒருவனை ஷெரீப் அழைத்தார்.
ஓய்! வில்ஸ்! உனக்கு தொழில் எதுவும் இல்லை. அதனால் நீ எங்களுடன் வரலாம்! வா!
சரி, ஷெரீப்! நான் உங்களுடன் வருகிறேன்!

நிறைய தண்ணீர் பிடித்துக் கொள்ளுங்க. பாலைவனத்தில் தண்ணீர் கிடையாது.
ஜானியும், ஷெரீப்பும் மற்றவர்களு
புறப்படும்போது வக்கீல் குமாஸ்
வந்தா
ஷெரீப்! ஷெரீப்! நானும் வருகிறேன்!
ஷெரீப்! அந்த கொலைகாரர்களை பிடித்தால்தான் மனது ஆறும்!
எபி! உன்னைப்—பாராட்டுகிறேன். ஆனால் உன்னால் முடியாது. நீ ஆபீசை பார்த்துக்—கொள்.

ஷெரீப்பையும் சேர்த்து மொத்தம் ஆறு பேர் புறப்பட்டனர்.
ஜானி! அவர்கள் சான்மைக்கிலோ போய்-விட்டால், பிடிப்பது கடினம்.எனக்கு அங்கே அவர்களை கைது செய்ய--அதிகாரமும் கிடையாது!
ஆமா, ஷெரீப்! அதை நான் ஒப்புக்--கொள்கிறேன். அவர்--களை சீக்கிரம் மடக்கவேண்டும்!
லைவனத்தில் பயணம் தொடர்கையில் டரும் ஜாக்கும் தாகத்தால் தவித்தனர்.
ஷெரீப்! தாகமா இருக்கு! தலைவலிக்குது! என்னால் முடியாது!
ஆமா ஷெரீப்! என்னாலும் பயணம் செய்ய முடியவில்லை! ஊர் திரும்ப--அனுமதியுங்க!


ஷெரீப்! அவங்க ரெண்டு பேரையும் ஊர் திரும்பச்-சொல்லுங்க!
சரி! தண்ணீர் பாட்டில்களை கொடுத்துவிட்டு போங்க!
அது முடியாதே ஷெரீப்!
எங்களுக்கு திரும்பும் வழியில் தாகம் எடுக்குமே!
கோபத்துடன் ஷெரீப் பயணத்தை தொடர்ந்தார்.
புறப்படும் போதே இருவரும் அரைகுறை மனதுடன் புறப்-பட்டனர்!
இப்படிப்-
மேல்!


ாலைவனத்தில் நெடும் பயணம் தொடங்கியது.
ானி முன்னால் சென்றபடி, குதிரைகள் போன
_ங்களை பார்த்தபடி சென்றார்.
தடங்களை வைத்து ார்க்கும்போது ஒரு குதிரை நொண்டிக் கொண்டே ன்ற மாதிரி இருக்கு. ப்படி என்றால், அவர்-கள் சான்மைக்கிலோ போகமுடியாது!

உர் என்று பாலைவன பாம்பு ஒன்று சீற, ஷெரீப் சென்ற குதிரை
னைத்துத் துள்ள-

ஷெரீப் குதிரையில் இருந்து சரிந்து பாறையில் விழுந்தபோது. எ
-யின் துப்பாக்கி உருமியது.
எமி! சுடாதே! எங்களை நீ தீர்த்துகட்டி விடுவாய் போலிருக்கு!
ஆ! ஐயோ கை!

வில்ஸ் சுட்ட குண்டு, பாம்பில் தைக்க பாம்பு இறந்தது.
வில்ஸ்! அபாரமா சுட்டாய்! ஷெரீப்பை தூக்குங்க. கை முறிந்துவிட்டதா?

ஜானி! எனது லதுகை முறிந்து-ட்டது! என்னால் நடமுடியாதே!
கவலை வேண்டாம், ஷெரீப்!
கை ஆட்டத்துடன் எபி கட்ட குண்டு, தண்ணீர் பீப்பாயில் பாய்ந்து, ஓட்டை விழுந்து, தண்ணீர் கொட்டி விட்டது!
எல்லா தண்ணீரும் போச்சு! அது என் தவறே!
நீ உன்னால் முடிந்ததைச் செய்தாய்.
ஆனா இனி துப்பாக்கியை தூக்கும் வேலையை எங்களிடம் விட்டுவிடு!
யை கட்டி, அதை அசையவிடாமல் செய்தார், ஜானி!
ஷெரீப்! கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்! டாக்டரிடம் போகும் வரை இப்படியே இருக்கட்டும்!
ஷெரீப்! நான் பயன்படாமல் போய்விட்டேனே!

பால் நிலா காய, ஓய்வு எடுத்தனர்!
ஜானி! நீங்க தூங்குங்க. நான் காவல் இருக்கிறேன் 2 மணிக்கு எழுப்புகிறேன்.
சரி, வில்ஸ்!
2 மணி நேரம் கழித்து–
குதிரைகளை விரட்டிவிட்டால் சத்தம் கேட்கும். விழித்துக்–கொள்வார்கள். நான் ரகசியமா இங்கு இருந்து நழுவ வேண்டும்!

ில்ஸ். மெதுவாக தன் குதிரையை
ழைத்துச் சென்றான்.
எல்லா தண்ணீர் பாட்டில்களையும் எடுத்துக்-
-கொள்கிறேன். அவை எனக்குத் தேவை!
ஞ்ச தூரம்போய் வில்ஸ் குதிரை
் ஏறிக்கொண்டான். மெதுவாக
்பட்டான்.
விடியும் வரை மெதுவா போகணும். பிறகு வேகமா போய், கொலைகாரர்கள், சான்-மைக்கிலோ போகும் முன் பிடிக்க வேண்டும்!
அவர்களால் என்-அளவு சண்டை போட-முடியாது.
20 ஆயிரம் டாலர்களை அடைய, ஆபத்தை பார்த்தால் முடியாது!

இரவு 2 மணி அளவில் ஜானி விழித்துக்கொண்டு, மற்ற இரு வரையும் எழுப்பினார்!
ஷெரீப்! வில்ஸ் துரோகம் செய்துவிட்டான்! தண்ணீர் பாட்டில்களை_ _யும் கொண்டுபோய் — —விட்டான்!
ஜானி! இந்த நிலையில் நாம் எவ் செய்யலாம்!


ஜானி எழுந்துகொண்டார்-
நம்மை தண்ணீர் இல்லாமல் சாக விட்டுவிட்டு போய் விட்டான். நான் உடனே பின்தொடர்ந்து போய் -அவனை பிடிக்கிறேன். வேறு வழி- -இல்லை! நமக்கு தண்ணீர் தேவை!


ரவில் ஒரு இடத்தில் ஓய்வு எடுத்த கொலைகாரர்களான
ர்சரும், ஹூக்கரும் அதிகாலையில் எழுந்துகொண்டனர்.
ஹூக்கர்! தோபார்! யாரோ வருகிறார்கள்!
ஹூக்கர்! அவனிடம் நல்ல ிரை இருக்கு. நமது நொண்டிக்—குதிரையை மாற்ற அது பயன்படும்.
அவனிடம் உள்ள தண்ணீர் பாட்டில்களையும் எடுக்க—வேண்டும்!

உம்! அருகில் வந்துவிட்டான். மடக்குவோம்!
அது அப்படி இருக்கையில் ஜானி, மி
வேகமாக பின்னால் வந்து கொண்
இருந்தார்.
கழுகுகள் பறக்க காரண
என்ன?
உம்! வக்கீலை கொலை செய்தவர்கள்தான் வில்ஸை-யும் கொலை செய்துவிட்டு-போய்இருக்கவேண்டும்!

இதுதான், ஒரு கொலைகார-வின் நொண்டி குதிரை. இதை விட்டுவிட்டு, வில்ஸ்சின் குதிரை-யில் தப்பிப்போய்-இருக்கிறார்கள்!
வில்ஸ் உடலை ஜானி ஒரு இடத்தில் புதைத்தார். பிறகு மின்னல் வேகத்தில் பறந்தார்.
அவர்கள் ரொம்ப தூரம் போய் இருக்க முடி-யாது. எப்படியாவது பிடிப்பேன்!
கொஞ்ச தூரம் போனதும், ஒரு மணல் மேட்டில்இருந்து இருவரை ஜானி பார்த்தார்.
உம்... அதோ வக்கீலையும் வில்ஸ்சையும் கொலை செய்த கொலை-காரர்கள்!
அவர்கள் இருவரையும் ஜானி தனி ஆளாக சந்திக்க முடிவு செய்தார்.
ஷெரீப்பும், எபியும் என்னுடன் வந்தா-லும் பயன் பட மாட்டார்-கள் எனவே நானே...

அபாயகரமான அந்த கொலைகாரர்களை சந்திக்க ஜானி மின்னல் வேகத்தில் பறந்தார்.
லூக்கர்! யாரோ நம்மை பிடிக்க வருகிறார்கள். மறைந்து கொள்!
அடுத்த வினாடி இருவரும், ஒரு பாறைக்கு பின்னால் பதுங்கிச் சுட்டார்கள்.
ஜானியை இரு குண்டுகள் உரசிக் கொண்டு சென்றன.
அவர்கள் நன்றாக மறைந்து-கொண்டு சுடுறாங்க!

தொடர்ந்து துப்பாக்கி குண்டுகள் பறந்து வர, ஜானி ஒரு பாறைக்கு பின்னால் ஓடினார்.
பிறகு ஜானி சுடத்தொடங்கினார்.
அவர்களிடம் கத்தியும் இருக்கு!
சில குண்டுகளை சுட்ட ஜானி, அது பலன் அளிக்காததால் திடீர் என்று எழுந்து ஓடினார்.
அவர்கள் அருகே போய்தான் சுடவேண்டும்!

ஜானி கீழே விழுந்ததும், லூக் எழுந்து நின்றபடி—
அவனை குண்டு தாக்கி விட்டது! முட்டாள் தனமா மாட்டிக்-கொண்டான்!
லூக் எழுந்து நின்றதும் ஜானி திடீர் என்று படுத்துக்கொண்டு துப்பாக்கி விசையை தட்டி-விட்டார்.
முட்டாளே... உன்னை வெளிப்-படுத்தவே அந்த உபாயம் செய்தேன்.
ஜானி சுட்ட குண்டு கொஞ்சமும் குறி தவறாமல் லூக்கின் நெஞ்சில் பாய்ந்தது.
ஆ!

இனி தன் பாச்சா பலிக்காது என்று உணர்ந்த வின்சர், லூக்கரின் குதிரையையும் பிடித்துக்கொண்டு தப்ப முயன்றான்.
அவனால் என்னை பிடிக்க — முடியாது. முதலில் ஒரு குதிரையில் போவேன். அது களைத்ததும் அடுத்த குதிரை!
பயத்தில் தப்பி ஓடும் வின்சரை, ஜானி உடனடியாக பின் — தொடர்ந்தார்.
இவன்தான், வக்கீலை கொலை- -செய்தவன். இவனிடமதான் பணமும் இருக்க- -வேண்டும்!
வழியில், ஜானியை நோக்கி வின்சர் சுட்டான்.
உன்னைத் — கொல்லாமல் விட மாட்டேன்!

வின்சர் போன குதிரையை ஜானி சுட, அவன் கீழே விழுந்தான்.
கையில் கத்தி வைத்து இருப்பான்!
ஜானி, குதிரையில் இருந்து குதித்து அவனை நெருங்கினார்.
வின்சர்! வக்கீல் டல்லாஸ், வில்ஸ் இரு-வரையும் கொலை செய்ததற்காக உன்னை பிடித்துச்-செல்கிறேன்!
தப்பிக்க கடைசி முயற்சியாக, வின்சர், ஜானி மீது பாய்ந்தான். ஆனால் ஜானி அவனைத்-தூக்கி வீசினார்.
இனி என்னிடம் இருந்து தப்ப-முடியாது.